## الدرس الثاني

## ومن الأمور المهمة التعلق بالصلاة

## பாடம் - 2

## தொழுகை சம்பந்தமான சில முக்கியமான விடயங்கள்

1.பள்ளிவாசலில் ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றுவது ஆண்கள் மீது கடமையாகும். ஏனெனில்

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ لَقَدْ هَمَمْتُ أَنْ آمُرَ بِالصَّلَاةِ فَتُقَامَ ثُمَّ أُخَالِفَ إِلَى مَنَازِلِ قَوْمٍ لَا يَشْهَدُونَ الصَّلَاةَ فَأُحَرِّقَ عَلَيْهِمْ (خ/ ٢٤٢٠،م/ ٦٥١)

'தொழுகை நிலைநாட்டப்பட நான் கட்டளையிட்டுப் பின்னர் நம்முடன் ஜமாஅத்தில் கலந்து கொள்ளாத மக்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களைத் தீயிட்டுக் கொளுத்த நான் நினைத்தேன்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), புகாரி(2420), முஸ்லிம்(651)

2.பள்ளிவாசலுக்குச் சீக்கிரமாகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் செல்வது ஒரு முஸ்லிமுக்கு மார்க்கமாக்கப்பட்டுள்ளது.

3.வலது காலை முன் வைத்து பள்ளிவாசலுக்குள் நுழைவதும் அப்போது اللَّهُمَّ افْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ 'அல்லாஹும்மஃப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக' (முஸ்லிம்-713) என்று ஹதீஸில் வந்துள்ள துஆவை ஓதுவதும் சுன்னத்தாகும்.

4.பள்ளிவாசலில் அமர்வதற்கு முன் பள்ளியின் காணிக்கைத் தொழுகை இரண்டு ரக்அத் தொழுது கொள்வது நபிவழியாகும். ஏனெனில்

عَنْ أَبِي قَتَادَةَ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: إِذَا دَخَلَ أَحَدُكُمْ الْمَسْجِدَ فَلْيَرْكَعْ رَكْعَتَيْنِ قَبْلَ أَنْ يَجْلِسَ (خ/ ٤٤٤، م/ ٧١٤)

நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவர் பள்ளிவாசலுக்குள் நுழைந்தால் அங்கு அமர்வதற்கு முன் இரண்டு ரக்அத் தொழுது கொள்ளட்டும்.' அறிவிப்பவர்: அபூகதாதா(ரலி), (புகாரி-444, முஸ்லிம்-714)

5.தொழுகையில் மறைக்க வேண்டிய பகுதியை மறைப்பது அவசியம். அது ஆண்கள் மறைக்க வேண்டிய பகுதி தொப்புளிலிருந்து முட்டுக்கால் வரை யாகும். பெண்களுக்கு உடல் முழுவதும் மறைக்க வேண்டிய பகுதியாகும். ஆனால் தொழும்போது பெண்கள் முகத்தை மறைக்கக் கூடாது.

6.கிப்லாவை முன்னோக்குவது அவசியமாகும். இது தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நிபந்தனை ஆகும். ஆனால் கிப்லாவை முன்னோக்க முடியாத அளவுக்கு நோய் அல்லது அதுபோன்ற ஏதேனும் தடை இருந்தாலே தவிர.

7.தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவது கடமையாகும். நேரம் வருவதற்கு முன்னால் தொழுவது கூடாது. நேரத்தை விட்டும் தொழுகையைப் பிற்படுத்து வதும் தடுக்கப்பட்டதாகும்.

8.தொழுகைக்காக சீக்கிரம் (பள்ளிக்குச்) செல்ல வேண்டும். முதல் வரிசையில் நிற்பதற்கும் (ஃபர்ழு) தொழுகையை எதிர்பார்த்து இருப்பதற்கும் அக்கரை காட்ட வேண்டும். ஏனெனில் இவற்றுக்கு மிகப் பெரும் சிறப்புகள் இருக்கின்றன.

عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ لَوْ يَعْلَمُ النَّاسُ مَا فِي النِّدَاءِ وَالصَّفِّ الْأَوَّلِ ثُمَّ لَمْ يَجِدُوا إِلَّا أَنْ يَسْتَهِمُوا عَلَيْهِ لَاسْتَهَمُوا وَلَوْ يَعْلَمُونَ مَا فِي التَّهْجِيرِ لَاسْتَبَقُوا إِلَيْهِ ...(خ/ ٦١٥، م/ ٤٣٧)

'பாங்கிலும் முதல் வரிசையிலும் உள்ள நன்மைகளை மக்கள் அறிவார் களானால் பிறகு (அதில் யாருக்கு முன்னுரிமை கொடுப்பது எனும் நிலையில்) சீட்டுக் குலுக்கி எடுத்தே தீர்வு காண முடியும் என்று அவர்கள் கருதினால் சீட்டுக்குலுக்கலில் ஈடுபடுவார்கள். தொழுகையை ஆரம்ப நேரத்தில் நிறை வேற்றுவதில் உள்ள நன்மையை அறிவார்களானால் அதற்காக முந்திச்செல்வர்' என்று நபி (ஸல்) கூறியுள்ளார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி-615, முஸ்லிம்-437) அபூஹுரைரா (ரலி) அவர்கள் மேலும் அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قال: ... لَا يَزَالُ أَحَدُكُمْ فِي صَلَاةٍ مَا دَامَتْ الصَّلَاةُ تَحْبِسُهُ ...(خ/ ٦٥٩، م/ ٦٤٩)

'உங்களில் ஒருவரைத் தொழுகை தடுத்துவைத் திருக்கும் வரை அவர் தொழுகையிலேயே இருக்கிறார்'... என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்: புகாரி(659), முஸ்லிம்(649)